# திருமங்கையாழ்வார் பேசிய கதைகள்

ஸ்ரீ.உ.வே.ப்ர.ப.அண்ணங்கராசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்

திருமங்கையாழ்வார் அநுஸந்தித்த கதைகளில் மற்று எந்த ஆழ்வார்களும் அநுபவியாமல் இவரொருவரே அநுபவித்த தென்னலாம்படியான கதை எது? என்று கேட்டால், பெரிய திருமொழியில் (5–8) ஏழையேதலன் பதிகத்தில் **வாதமாமகன் மர்க்கடம் விலங்கு** என்கிற இரண்டாம் பாட்டிலும், **மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்** என்ற ஐந்தாம் பாட்டிலும், **துளங்குநீண்முடி யரசர் தம்குரிசில்** என்கிற ஒன்பதாம்பாட்டிலும் அநுஸந்தித்துள்ள கதைகள் மூன்றும் அபூர்வமானவை; இவ்வாழ்வார் ஒருவரே அநுஸந்தித்தவை. '**ஏழைஏதலன் கீழ்மகனென்னுது**' என்ற முதற்பாட்டில் அநுஸந்தித்த கதையும் அபூர்வமானதுதானே என்னவேண்டா, பெரியாழ்வார் திருமொழியில் (3–10–4) **கூரணிந்த வேல்வலவன் குகனோடுங் கங்கைதன்னில், சீரணிந்த தோழமை கொண்டதுமோர் அடையாளம்** என்றுள்ள பாசுரம் காண்க. அதில் சீரணிந்த தோழமை என்றதைத்தான் திருமங்கையாழ்வார் **ஏழைஏதலன்** பாசுரத்தினுல் விவரித்தருளினுர் – என்றுணர்க. மேலெடுத்த மூன்று பாசுரங்களில் அபூர்வமென்னப்பட்ட மூன்று கதைகளின் விவரணம் வருமாறு.

**வாதமாமகன் மர்க்கடம்விலங்கு**
**மற்றோர்சாதியென்றொழிந்திலை–உகந்து**
**காதலாதரம் கடலினும்பெருகச் செய்**
**தகவினுக்கில்லைகைம்மாறென்று**
**கோதில்வாய்மையினுயொடுமுடனே**
**உண்பன்நானென்றவொண்பொருள் எனக்கும்**
**ஆதல்வேண்டுமென்றடியிணையடைந்தேன்**
**அணிபொழில்திருவரங்கத்தம்மானே (2)**

ராவண ஸம்ஹாரமான பின்பு விபீஷணன் முதலிய அரக்கர்களோடும் ஹநுமான் ஸுக்ரீவன் முதலிய வாநரர்களோடும் ஸீதாலக்ஷ்மணர்களுடனும் புஷ்பக விமாநத்தில் ஏறி ஸ்ரீராமபிரான் ஆகாயமார்க்கமாக அயோத்திநகர் நோக்கி மீண்டெழுந்தருளும்போது கங்காநதியும் யமுநாநதியும் சேருமிடமான ப்ரயாகையில் வஸிக்கின்ற பரத்வாஜமுனிவரது விருப்பத்தின்படி அவ்வாச்ரமத்தில் இறங்கி ஸேனைகளுடன் அங்கு விருந்துண்ணச் சம்மதித்து நின்றவளவிலே பரத்வாஜ முனிவர் தமது தவப்பெருமையால், அத்திரளிலுள்ளார் எல்லார்க்கும் வேண்டிய வளவு உண்கலங்களையும் உணவுகளையும் தெய்விகமாக வருவித்து வெகுஸம்ப்ரமமாக விருந்து செய்தனர். அங்ஙனம் ராமனும் அவனைச்சார்ந்தவரனைவரும் தம்தமக்கென்று பரிமாறியவாழையிலையில் உண்ணுகிற பொழுது, ஏற்கனவே தவணைகடந்து விடுகின்றதென்று பரதன் வருந்தித் தீக்குதித்து உயிர்துறந்துவிடுவனோ வென்பதைச் சிந்தித்து, தாம் மீண்டுவந்த செய்தியைப் பரதனிடம் சொல்லி அவன் கருத்தை உணர்ந்துகொண்டு விரைந்து வருமாறு அனுப்பப்பட்டு பரதனிடஞ்சென்றிருந்த அனுமன் அவனுக்குச் செய்தி கூறி மீண்டனனுக, அச்சமயத்தில் அனுமானுக்

காக முனிவன் தனியே ஓரிலையை மறுபடியும் வருவிக்க வேண்டாதபடி ஸ்ரீராமன் அனுமனைத் தனது எதிரில் இருந்து தனது இலையிலேயே ஒருபகுதியில் உண்ணும்படி நியமித்து அங்ஙனமே அவனுடன் சிலபழங்களை ஸஹபோஜனஞ் செய்தனன் என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது. இராமபிரான் அனுமானுடன் ஸஹபோஜனஞ் செய்த செய்தி வாஸிஷ்ட ராமாயணத்திலுள்ள தென்பர்; (அந்நூல் ஜ்ஞாநவாஸிஷ்டத்தினும் வேருனது; ஶ்லோகந்தோறும் காயத்ரியின் அக்ஷரங்களை முறையே முதலெழுத்தாகக் கொண்டு தொடங்குவது) ஆசார்யஹ்ருதயத்தில் ''ம்லேச்சனும் பக்தனுனல்'' இத்யாதியான 85ம் ஸூத்ரத்தில் ''தூதுமொழிந்து நடந்து வந்தவர்களுடைய ஸம்யக் ஸகு₃ண ஸஹபே₄ாஜநமும்'' என்ற விடத்து வியாக்கியானத்தில் ''உபகாராய ஸுக்₃ரீவோ ராஜ்யகாங்க்ஷீ விபீ₄ஷண: நிஷ்காரணுய ஹநுமாந் தத்துல்யம் ஸஹபே₄ாஜநம்'' என்று திருவுள்ளம்பற்றிக் கோதில் வாய்மையினுயொடுமுடனே யுண்பன்நானென்ற பெருமாளோடு பண்ணின ஸஹபோஜநமும்'' என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தியில் உதாஹரிக்கப்பட்டுள்ள வசநம் வாஸிஷ்ட ராமாயணத்திலோ பாத்மோத்தரத்திலோ உள்ளதென்று பெரியோர் கூறுவர். அந்த வசனத்தின் கருத்தாவது – ஸுக்ரீவன் விபீஷணன் முதலானவர்கள் ஒவ்வொருவரும் ப்ரதி ப்ரயோஜநத்தை விரும்பிச் செய்தார்கள். அங்ஙனன்றியே அனுமான் ஒருவனே அநந்யப்ரயோஜநனுக உதவினனுதலால் அவனேடு உடனுண்பதே நமக்கு ஏற்றது என்பதாம். ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச் செய்யும் ரீதியை நோக்குமிடத்து ஸ்ரீராமன் அனுமனேடு ஸஹபோஜநம் செய்தருளினது விளங்கும்.

**மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சம்**
**மலரடிகண்டமாமறையாளன்**
**தோகைமாமயிலன்னவரின்பம்**
**துற்றிலாமையிலத்த! இங்கொழிந்து**
**போகம்நீயெய்திப் பின்னும் நம்மிடைக்கே**
**போதுவாயென்றபொன்னருளெனக்கும்**
**ஆகவேண்டுமென்றடியிணையடைந்தேன்**
**அணிபொழில்திருவரங்கத்தம்மானே.**

கோவிந்தஸ்வாமி என்பானெருபிராமணன் இதிஹாஸ புராணங்களைப் பலகாலுங்கேட்டு அதனுலே கண்ணபிரானுடைய பால்ய சேஷ்டிதங்களையும் ராஸக்ரீடை (குரவைகோத்தல்) முதலிய திருவிளையாடல் களையும் ஸாக்ஷாத்தாகக்கண்டு களிக்கக் கருத்துக் கொண்டவனுய், 'இதை எம்பெருமான் பக்கல் நாம் ப்ரார்த்தித்தால் அப்பெருமான் அருள்செய்யக்குறையில்லை' என்றெண்ணி 'ஊன்வாடவுண்ணுது உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப்புலனைந்தும் நொந்து தான்வாடவாடத் தவம்செய்கையில், எம்பெருமான் இவனது நினைவின்படியே க்ருஷ்ணுவதார க்ருத்யங்களையெல்லாம் அவ்வண்ணமே ஸாக்ஷாத்கரிப்பித்து 'இன்னமும் உனக்கு வேண்டுவதென்?' என்று கேட்டருளினன்; அதற்கு இவன் 'தேவரீரோடுகூடவே அத்தாணிச்சேவகனு

யிருந்து நித்யாநுபவம் பண்ணிக் களிக்க விரும்பியிருக்கிறேன்' என்றுன். இவன் தன் வாயாலே இங்ஙனே கூறினனுயினும் உள்ளுவாருள்ளிற் றெல்லாமுடனிருந்தறியு மெம்பெருமான் அவனுடைய நாபியிலுள்ள உண்மைக்கருத்தை உள்ளபடியே கண்டறிய வல்லவனுதலால் 'இவனுக்கு நம்மோடு நித்யாநுபவம் பண்ணுகைதான் உண்மையான விருப்பமோ? என்று ஆராய்ந்து பார்த்தான்; பார்த்ததில் 'இவனுக்கு ஶப்தாதி விஷய போகங்களில் இன்னமும் நசைவிட்டபாடில்லே' என்றறிந்து, 'அந்தணு ! நீ இன்னம் சிறிதுகாலம் இந்நிலத் திலேயேயிருந்து விஷயபோகங்களே ஆசைதீரச்செய்து தலேக்கட்டி, பின்பு நம்மோடே வரக்கடவாய்' என்றருளிச் செய்து அந்தர்த்தானமடைந்ததாக ஒரு இதிஹாஸமுண்டு.

**துளங்குநீண்முடி யரசர் தம் குரிசில்**
**தொண்டைமன்னவன் திண்டிறலொருவற்கு**
**உளங்கொளன்பிஞேடின்னருள் சுரந்து**
**அங்கோடுநாழிகையேழுடனிருப்ப**
**வளங்கொள்மந்திரம் மற்றவற்கருளிச்**
**அடியேனறிந்து உலக [செய்தவாறு**
**மளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன்**
**அணிபொழில்திருவரங்கத்தம்மானே.**

சோழநாட்டரசனுடைய குமாரனும், தொண்டைநாட்டரசனுமான தொண்டை மான் சக்கரவர்த்தி திருவேங்கடமலேயில் எம்பெருமானேயடுத்து மிக்க பக்தியுடனே சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வழிபாடு செய்ய, திருவுள்ளமுகந்த அத் திருவேங்கட முடையான் மெய்த் தொண்டனுன அவ்வரசனே நண்பனுகக்கொண்டு அவன் வரும் பொழுதெல்லாம் தனது அர்ச்சாவதார வரம்பைக் கடந்து அவனுடன் பேசுபவனுயின னென்றும், அவ்வரசனுக்கு அஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தையும் அதன் அருமையான பொருள்களேயும் மற்றும் பல ஹிதங்களேயும் உபதேசித்தருளினதுமன்றி, அவனுக்கு பகை வெல்லுதற் பொருட்டுத் தனது சங்கசக்கரங்களேயும் கொடுத்தருளின னென்றும், அவ்வரசன் அந்தப்பெருமானுக் குக் கோபுரம் மண்டபம் திருமதிள் முதலிய திருப்பணிகள் செய்தனனென்றும் ப்ரஸித்த மான வரலாறு அறிக.